**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 17/2025 வா.சா.3**

2026–ம் ஆண்டு ஜீன் திங்கள் 17–ம் நாள் புதன்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு17(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: வசந்தன் | தந்தை பெயர்: சங்கர் |
| ஊர்: | தாலுகா: |
| வயது: | தொழில்: |
| ஜாதி: | சமயம்: |

---

**<u>17.06.2026 முதல் விசாரணை</u>**

1. நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 3 வது சாட்சி ஆவேன். என் தரப்பில் நிரூபண உறுதிக்கூற்றை தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது என் கையொப்பம் தான். நான் சொல்ல சொல்ல வாதி தரப்பு வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. எனது தரப்பில் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. பிராது படி தீர்ப்பாக வேண்டிகிறேன்.

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை:</u>**

2. தாவாச் வழக்கிடைச் சொத்து தர்மப்பட்டி கிராமத்தில் உள்ளது. தாவாச் வழக்கிடை சொத்துக்கு மேற்குபுறம் என்னுடைய சொத்து உள்ளது. தாவாச் சொத்து ஆதியில் எனது தாத்தா அழகு பெயரில் உள்ளது. அழகு தற்போது இறந்து விட்டார். அழகுக்கு நாச்சம்மாள், பெரியய்யா, சின்னய்யா, ராசு, பழனியம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார். 2023 ல் மின்இணைப்பு வழங்கப்பட்டது. ராசு பெயரில் வழங்கப்பட்டது. நாச்சம்மாள், பெரியய்யா, சின்னய்யா, ராசு, பழனியம்மாள் ஆகியோர்கள் சேர்ந்து சம்மதத்தின் பெயரில் தான் மின் இணைப்பு வழங்கப்பட்டது என்றால் பெரியய்யா மட்டும் கையொப்பம் செய்து கொடுத்தார். அழகு வாரிசுகளின் சம்மத்தின் பெயரில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி பெரியய்யா, 6 ம் பிரதிவாதி ராசு ஆகியோர் எனது பங்காளிகள் ஆவார்.